விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 27 சனிக்கிழமை (13.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329



### பசிலின் கன்னி பட்ஜெட் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

# அரச செலவீனங்களை குறைக்க முன்மொழிவு

### துண்டுவிழும் தொகை 1,628 பில்லியன் ரூபாய்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களுக்கான செலவீனங்களை குறைக்க பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

- அரச சேவையில் ஓய்வுபெறும் வயதெல்லை 65 ஆக நீடிப்பு.
- அரசாங்க பணியாளர்களுக்கு மீண்டும் மோட்டார் சைக்கிள்.
- கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பௌத்த விகாரைகளின் பராமரிப்புக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- கொரோனாத் தொற்றுப் பரவல் காலத்தில் பாதிப்புக்குள்ளான மொத்த, சிறிய மற்றும் மத்திய வியாபாரங்கள் மேற்கொள்வோரின் நலன் கருதி 5000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு.

## வடக்கு மாகாண பாடசாலைகள் இன்று இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் இன்று சனிக்கிழமை இயங்கும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே தீபா ▶15

## ரூ.3 ஆயிரம் கோடி

### அதிபர் - ஆசிரியர் சம்பள பிரச்சினையைத் தீர்க்க ஒதுக்கீடு

(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர் சம்பளப் பிரச்சினையை ஒரே நேரத்தில் தீர்க்க 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாட்டை ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு, 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ▶15

வரவு - செலவுத் திட்டம்

## மக்கள் மீது மேற்கொள்ளும் மற்றுமொரு தாக்குதல்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மற்றுமொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பிரதான எதிர்க்கட்சி ▶15

## பட்ஜெட் இடைவேளையில் மகிந்தவுடன் சுமந்திரன்



(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கொண்ட புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு - செல ▶15

## காணாமல்போனவர்களுக்காக நட்டஈடு வழங்க 300 மில்லியன் ரூபாய்

(கொழும்பு)

பல்வேறு காரணங்களினால் பல்வேறு காலப்பகுதியில் காணாமற்போனவர்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கு வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 300 மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

வெற்றி பெற்றவர்களினால் எதிர்த்தரப்பினரை துன்பத்திற்கு ஆளாக்குவது நவீன சமூகத்தில் மிகவும் வெறுக்கத்தக்க கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆயினும் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் எதிர்பரப்பு அரசியல் கருத்துடையவர்கள் மிகவும் மனி ▶15

## மதுபானம், சிகரெட்

### விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிகரெட் ▶15

## மக்களுக்கு பயனளிக்காத வரவு - செலவுத் திட்டம்

### ஐ.தே.கட்சி சாடல்

(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு எவ்வித நிவாரணத்தையும் வழங்காது, மக்களின் நேரத்தை வீணடித்த வரவு - செலவுத் திட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷ குடும் ▶15

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## திரு. சிவகுரு சிதம்பரநாதன்

இலக்கணாவத்தை, உடுப்பிட்டி
(கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வர்த்தக முகாமையாளர்)

அளவற்ற அன்பு கொண்டோம் அன்னையின் பால் - ஆனால்
அவளெம்மை விட்டு சென்றாள் தனிமையின் மேல்.
அவளற்ற துயரம் எமை அணுவளவும் அணுகாமல் - நீர்
அவளுக்கு நிகராய் எம்மில் அன்பு கொண்டீர் அப்பா.

முத்துக்களாய் மூன்று பெண் பிள்ளையை பெற்றீர் - கூடவே
இரத்தினமாய் ஓர் அன்பு மகனையும் ஈன்றீர்.
பல்வேறு இடங்களிலும் பணிபுரிந்து பொருளீட்டி - எமை
பசி பஞ்சம் ஏதுமின்றி பத்திரமாய் பார்த்துக் கொண்டீர்.

பத்தோடு பதினொன்றாய் நாம் பாரினிலே போகாமல் - நீர்
பாரறிய ஊர்வியக்க நாம் படிக்கவும் செய்தீர்.
பலநாடு பல கண்டம் போய் பல பட்டங்கள் பெற்றோம் - உம்
பிள்ளைகள் என மார்தட்ட பல பெருமைகள் சேர்த்தோம்.

எமக்கு ஒன்று என்றதுமே துடிதுடித்துப் போவீர் - அங்கு
உமக்கு ஒன்று என்றதுமே நாம் படபடத்து போவோம்.
சிரிப்பொன்றை மட்டுமே உம் முகத்தினில் காண்கிறோம் - எமை
எதுக்கென்றும் கண்டிப்பாய் பேசியதை காணோம்.

இப்போது வளர்ந்துவிட்டோம் உலகினை அறிந்து விட்டோம் - நாம்
அப்போதும் உமது அன்பை மறக்காமல் நினைக்கின்றோம்.
எப்போதும் உம் வேதனைகள் மறைத்து சாதனைகள் செய்தீர் - நீர்
தற்போதும் எமை எண்ணியே உமது வாழ்வினைக் கழிக்கின்றீர்.

இருக்கின்ற இப்பந்தம் இறுக்கமாய் காப்போம் - நீரின்றி
எமக்கென்று ஓர் சொந்தம் இருப்பதாய் காணோம் - நீர்
இருக்கின்ற திசை தன்னை கோவிலாய் பார்ப்போம் - நீர்
உரைக்கின்ற வாக்கதனை வேதமாய் கேட்போம்.

வஞ்சகம் ஏதுமின்றி வாயாரப் பேசுவீர் - பிறர்
பஞ்சமென்றறிந்தால் உமதினை பகிர்ந்து கொள்வீர்.
அஞ்சாமல் எவருடனும் பணிவாக நடந்துகொள்வீர் - நாம்
சஞ்சலம் கொள்ளும் போது எமை தட்டியும் கொடுப்பீர்.

அறுபதாம் வயதினிலும் உடல் அசராமல் நிற்கின்றீர் - அப்பா
அங்கும் இங்கும் ஆடி ஓடி பல பணிகளும் புரிகின்றீர்.
எச்செயல் செய்திடினும் நேர்த்தியாய் செய்கின்றீர் - அப்பா
நிச்சயம் எல்லோர் நெஞ்சிலும் உயர்வாக இருக்கின்றீர்.

பிறர் துணை நாடாமல் தனியாக வென்றிடுவீர் - அப்பா
பிறர்க்காக நீர் பல சேவையும் செய்திடுவீர்.
உமக்கென்று எதனையும் நீர் சேர்ப்பதுமில்லை - அப்பா
ஊருக்கெனின் எதுவும் செய்ய தயங்குவதும் இல்லை.

உடல் நலத்துடன் இன்று போல் என்றும் - புது
உற்சாகத்துடன் அன்று போல் இன்றும்
அறுபது என்ன, பல அகவையே கடந்தாலும் - நீர்
ஊர் உலகம் உலாவி வர உமது அறுபதாவது அகவைதனில்
உமது அன்புப் புதல்வர்கள் இதயத்திலிருந்து வாழ்த்துகிறோம்.!

இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் அப்பா..!

(8566)

இன்று (13.11.2021) சனிக்கிழமை தனது 60ஆவது பிறந்தநாளை விமரிசையாக கொண்டாடிக் கொண்டிருக்கும் இலக்கணாவத்தை உடுப்பிட்டியில் வசிக்கும், கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தக முகாமையாளரும் எமது பாசத்துக்குரிய தந்தையுமாகிய திரு. சிவகுரு சிதம்பரநாதன் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் உடல் நலத்துடனும் இறை ஆசியும் கொண்டு பல்லாண்டு வாழ மனதார வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: அன்புப் புதல்வர்கள்

இலக்கியா சிதம்பரநாதன் (நெதர்லாந்து)
சிவபானுகா சிதம்பரநாதன் (லண்டன்)
கோபிசங்கர் சிதம்பரநாதன் (லண்டன்)
தர்மிகா சிதம்பரநாதன் (லண்டன்)

# கொரோனா தொற்று மேலும் 23 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனாத்.தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,950 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# வடக்கின் குற்றச் செயல்களை தடுக்க சமூகப் பொலிஸ் பிரிவு

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் குற்றச் செயல்களைத் தடுக்க சமூகப் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் குற்றச் செயல்களைத் தடுக்க சமூகப் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்படும் எனவும் வடக்கில் இளைஞர்கள் பணியமர்த்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பூரண மேற்பார்வையின் கீழ், வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் பலிஹக்காரவின் பணிப்புரையின் பேரில், பிரஜா பொலிஸார் வடமாகாணத்தில் வேலையற்ற இளைஞர்களை வழிநடத்தும் வகையில் விசேட நிகழ்ச்சித் தொடர்களை தயாரித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இளம் குற்றவாளிகளின் குற்றங்களை நிறுத்துவதற்கான வழிகாட்டுதல். சமூக காவல் குழுக்கள் என்ற கருத்தின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

இதற்காக வடமாகாணத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்களை தெரிவு செய்து அவர்களின் விசேட திறமைகளை இனங்கண்டு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதே திட்டமாகும் என்றார்.

(ம-3,18,33)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

திரு. கதிர்காமு சண்முகராசா
SLPS - I



**சேவை விபரங்கள்**

1. யா/ கட்டைக்காடு R.C.T.M.S.- உதவி ஆசிரியர் - 28.11.1989 - 27.01.1992
2. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - 28.01.1992 - 31.12.1993
3. யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் - ஆசிரியர் - 01.01.1994 - 24.05.1999
4. யா/ தாளையடி R.C.T.M.S. - ஆசிரியர் - 25.05.1999 - 03.08.2000
5. யா/ தாளையடி R.C.T.M.S. - அதிபர் - 04.08.2000 - 18.01.2003
6. யா/ புலோலி M.M.T.M.S. - அதிபர் - 19.01.2003 - 14.11.2012
7. யா/ பொலிகண்டி H.T.M.S. - அதிபர் - 15.11.2012 - 31.03.2016
8. யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் - அதிபர் - 01.04.2016 - 04.09.2018
9. வலய கல்வி அலுவலகம், பருத்தித்துறை - அதிபர் - 05.09.2018 - இன்றுவரை

ஓய்வுக்காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் சகல வளங்களும் பெற்றுவாழ வாழ்த்துகிறோம்.

கல்விசார், கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

(C-3003)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சிவமலர் இராஜேஸ்வரன்
அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் சிவகுரு சேதுப்பிள்ளை

மலர்வு - 19.04.1940
உதிர்வு - 07.11.2021

கடந்த 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3002)

பாடசாலைச் சமூகம்
யா/ பரமேஸ்வரா வித்தியாலயம்
திருநெல்வேலி

# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

## 01.01.2022 முதல் 31.12.2022 வரை மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2022

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 15.11.2021 - 29.11.2021
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 30.11.2021 மு.ப. 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 30.11.2021 மு.ப. 10.30 மணி

| இல. | கச்சாய் உப அலுவலகம் | கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் ( மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம். | 12,628,000.00 | 126,300.00 | 750.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1,459,000.00 | 14,600.00 | 750.00 |
| 3 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 872,600.00 | 8,800.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,230,000.00 | 12,300.00 | 750.00 |
| 5 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 01 | 100,500.00 | 1,100.00 | 750.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 02 | 81,600.00 | 900.00 | 750.00 |
| 7 | களஞ்சிய அறை இல – 01 | 27,500.00 | 500.00 | 750.00 |
| 8 | களஞ்சிய அறை இல – 02 | 26,200.00 | 500.00 | 750.00 |
| 9 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 15,200.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் –01 | 18,600.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 02 | 21,000.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 03 | 16,800.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 65,600.00 | 700.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6,600.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 258,200.00 | 2,600.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 16 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 73,200.00 | 800.00 | 750.00 |
| 17 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,500.00 | 500.00 | 750.00 |
| 18 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,800.00 | 500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 30,400.00 | 500.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 16,400.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 21 | நாவற்குழி பொதுச்சந்தை | 32,300.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 15.11.2021 தொடக்கம் 29.11.2021 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
4. 30.11.2021 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-3000)

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**
**13.11.2021.**

## உரப் பிரச்சினை விவசாயத்தை கைவிடும் நிலையில் விவசாயிகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான சந்தையான கிளிநொச்சி சந்தையில் பல மரக் கறி வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை இடைநடுவே கைவிட்டுள்ள துடன் தமது நாளாந்த ஜீவ னோபாயத்தினை மேற் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரி வித்தனர்.

தற்பொழுது விவசாய செய்கைக் கான உரவகைகள் இல்லாத காரணத் தினால் பல விவசாயிகள் தமது பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதில் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பயிர்ச் செய்கை, மேற்கொள்ளப்பட்டாலும் உரிய விலை கிடைப்பதில்லை எனவும் இத னால் பயிர்ச் செய்கையை கை விட்டுள்ள தாகவும் தெரிவித்தனர்.

இதன் காரணமாக சந்தைகளில் பெரிதும் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (4-5-316)

## பாணுக்குள் நத்தை



(கொழும்பு)

வெதுப்பக உணவு உற்பத்திகளை விநியோகிக்கும் நடமாடும் ஓட்டோவில் விற்பனை செய்யப்பட்ட பாணுக்குள் நத்தை காணப்பட்ட சம்பவம் இங்கிரிய பிரதேச த்தில் பதிவாகியுள்ளது.

இதையடுத்து பாணை வாங்கிய நபர், குறித்த சம்பவம் குறித்து இங்கிரிய சுகா தார வைத்திய அதிகாரியின் அலுவல கத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார வைத் திய அதிகாரியின் அலுவலகம் தெரிவித் துள்ளது. (நி-5)

### ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி

## பொதுமக்களின் கருத்துக்களை உள்வாங்க தீர்மானம்

(கொழும்பு)

'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியில் பொதுமக்களின் கருத்துக்களையும் உள் வாங்க தீர்மானித்துள்ளதாக அந்த செய லணியின் தலைவர் கல கொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயல ணியை நடைமுறைப்படுத்து வது தொடர்பாக பல்வேறு தரப் பினரின் கருத்து க்களையும் கேட்டறியும் நிலையில், மக்க ளின் கருத்துக்களையும் உள் வாங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பி ட்டார். அதன் படி, நிறுவனங்கள், குழுக்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து யோசனை கள், ஆலோசனைகளை கோரப்படுவ தாகவும்,

பொது மக்கள் தமது கருத் துக்களை ocol.consultat ions@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செய லணி, செய லாளர், அஞ்சல் பெட்டி- 504, கொழும்பு என்ற முகவரிக்கோ எதிர்வரும் 30 ஆம் திகதிக் குள் அனுப்பலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## பாகிஸ்தானை வீழ்த்தி

# இறுதிக்குள் நுழைந்தது ஆஸி

இருபது-20 உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, பத்து ஆண்டுகளுக்கு பிறகு இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் பெரும் எதிர்பார்ப் புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, சிறப்பான ஆரம்பத்தை பெற்றுக் கொண்டது.

20 ஓவர்கள் நிறைவில், பகர் சமான் 55 ஓட்டங்களுடனும் ஹபீஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க பாகிஸ்தான் அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



இதன்போது அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் 2 விக்கெட்டுகளையும் பெட் கம்மின்ஸ் மற்றும் ஆடம் செம்பா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதை தொடர்ந்து சற்றுக் கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பமே சற்றுத் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. ஆனால், -மார்க்கஸ் ஸ்டொயினிஸ் மற்றும் மத்தியு வேட் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இதன்படி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்த அவுஸ்திரேலிய அணி, இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 17 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்ட மத்தியு வேட் தெரிவு செய்யப்பட்டார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், அவுஸ் திரேலியக் கிரிக்கெட் அணி, நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியை எதிர்கொள்ளவுள்ளது. (4-6)

## வலைப்பந்தாட்டப் போட்டி

# யாழ். மாவட்ட அணி சம்பியன்



ஏக ஆதிக்கம் செலுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் வலைப்பந்தாட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தேசிய மட்ட ஆண்களுக்கான மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் கிளிநொச்சி உள்ளக விளையாடரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து இரத்தினபுர இளைஞர் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் அணி 15:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2448

Search for people, places and things

### கஸ்தூரி

மழை விட்டுடுச்சா ஓவர்... ஓவர்...



இன்னும் ஒரு புயல் கௌம்புதாம் ஓவர்... ஓவர்...

### பிரகதைா

வீட்டுக்குள்ள குளத்தை கட்டுறவன் வெளிநாட்டுக்காரன்



குளத்துக்குள்ள வீட்டை கட்டுறவன் தமிழ்நாட்டுக்காரன்



### மேனன்

Tour

போகும்போது.....



போய் வரும்போது...



### காண்டீபன்

புருஷ்: Dress எடுக்க போகலயா?

Me: ஆச தான்... வேணும்னா கார்ட்ட குடு Purchase பண்ண போயிட்டு வரேன்



மூதேவி... மழை பெய்யுது காயப்போட்ட Dress எடுக்கப் போகலயான்னு கேட்டேன்...

### கஜன்

பொளக்கட்டும் மழை, மழை... நிரம்பட்டும் ஏரிக்கரை



நம்ப படை, படை... கத்தட்டும் கர,கர...



### துவாரகா

ஆளாளுக்கு இதுவும் கடந்து போகும் என்று சொல்றாங்க...



எங்கய்யா கடந்து போகுது எனக்கெல்லாம் பிரேக் டவுண் ஆகி நிக்குது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

13.11.2021
ஐப்பசி 27, சனிக்கிழமை
நவமி முற்பகல் 10.29 மணிவரை
சதயம் முன்னிரவு 8.11 மணிவரை
சுபநேரம் -3.07-4.37 மணிவரை
இராகு காலம் -9.07-10.37 மணிவரை
சந்திராஷ்டமம்- பூசம், ஆயில்யம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் எதிர்பாராத முக்கிய பிரமுகர் ஒருவரின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


மிதுனம்

உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்.


கடகம்

ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.


சிம்மம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


துலாம்

எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


தனுசு

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும்.


மகரம்

கல்யாணக் கனவுகள் நனவாகலாம், முன் கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.


கும்பம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


மீனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

உனது முகம் எப்பொழுதும் பூத்த புதுமலராய்த் திகழட்டும்.

# சஹ்ரானுக்கு சம்பளம் கொடுத்த புலனாய்வுத் துறை

## அம்பலப்படுத்தினார் மனுஷ

(கொழும்பு)

புலனாய்வுத் துறையினர் சஹ்ரானுக்கு சம்பளம் கொடுத்ததாக பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தெரிவித்ததாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாம் அறிந்த தகவல்களைக் கூற முயலும் போது எங்களை கைது செய்ய முயற்சிக்கின்றனர்.

சஹ்ரானை கைது செய்வதற்கு நாலக சில்வா நடவடிக்கை எடுத்த போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சூழ்ச்சி செய்ய திட்டமிட்டதாக கூறி நாலக சில்வாவை கைது செய்து, சஹ்ரானின் கைதை தடுத்தனர்.

அத்துடன் முன்னாள் சட்டமா அதிபரே விசாரணை அறிக்கையை முழுமையாக பார்த்துள்ளார். இது அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான சூழ்ச்சியின் பெறுபேறே என்று கூறியுள்ளார். நாங்கள் இது போன்ற கருத்துக்களை கூறும் போது எங்களை கைது செய்ய முயற்சிக்கின்றனர் என மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (நி)

# வாசு, விமல், கம்மன்பில அரசிலிருந்து வெளியேறுவர்

## ராஜித எதிர்வுகூறல்



(கொழும்பு)

அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட அணியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவார்கள் என முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்த அணியினருக்கு தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருக்க முடியாது என சிங்கள செய்தித்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த தகவல்களை வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

பிளவுபடுவதற்கு முன்னர் போராட்டம் நடக்கும். தற்போது அந்த அணியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அடுத்த கட்டமாக அந்த அணியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவார்கள்.

அவ்வாறு அரசாங்கத்தில் இருந்து வெளியேறவில்லை என்றால் அவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது. இதனை அந்த அணியினர் நன்கு உணர்ந்துள்ளனர். உரிய நேரம் வரும் வரை அவர்கள் காத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் இந்த அணியினர் நாங்கள் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய மாட்டார்கள். அவர்கள் தனியான அணியாக எதிர்க்கட்சியில் இருப்பார்கள் என நம்புகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 76 ஆவது பாதீட்டு சமர்ப்பணத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

வரவு - செலவுத்திட்ட சமர்ப்பணத்தை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றம் சென்றார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நேற்று பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

76 ஆவது பாதீடான இது, கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் இரண்டாவது பாதீடாகும். பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி, 7 நாட்களுக்கு இடம்பெறுவதுடன், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு, நவம்பர் 22 ஆம் திகதி இடம்பெறும். (நி)


## தவறிவிட்டது

வெற்றிவேல் கனகநாயகம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் யாழ் நகரப்பகுதிக்கும் கொக்குவிலிற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு- 077 539 1496

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்-1948.05.19
மறைவு- 2021.11.11

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. நந்தினி விஜேந்திரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி.
**புனிதவதி பஞ்சலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8584)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

# பரு. பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 16 வாக்குகளில் நிறைவேறியது.

சபையின் விசேட கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை சபையின் தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

வரவு- செலவுத் திட்டத்தை வாக்கெடுப்பிறகு விட்டபோது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 8 உறுப்பினர்களும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன தலா ஒரு உறுப்பினருமாக 16 உறுப்பினர்கள் வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். (4-5-60)

# யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்திடல் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

நவீன வசதிகளுடன் 55 மில்லியன் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டுத் திடல் நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானியக் கிளையின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்த மைதானம் சம்பிரதாயபூர்வமாக நேற்று கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில்மாறன், கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் ஜெயபிரகாஷ், யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன், செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந் நிகழ்வில் பங்கேற்றனர்.

இலத்திரனியல் ஸ்கோர் போட், கழக மனை, பயிற்சிகளுக்கான இடம் போன்றன இந்தத் திடலில் உள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதிற்குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது. (4-5-18-33)

# கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் 23 பேரினையும் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிருசாந்தன் நேற்று வெள்ளிக்கிழமை உத்தர விட்டார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று நீதிம ன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இலங்கை எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டை இந்திய மீனவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதாக றோலர் படகுகளின் நீளத்தினை மன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீரியல் வளத் துறையினருக்கு கட்டளை பிறப்பித்த நீதிவான் வழக்கை திங்கட்கிழமை வரை ஒத்திவைத்தார். (5-4-33-60)

# கரணவாயில் கத்திக்குத்து இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

கரணவாய் மேற்கு, அந்திரான் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபர் கத்தி வெட்டுக்கு இலக்காகினார்.

நள்ளிரவு அவரின் வீட்டுக்குச் சென்ற மூவர் வீட்டாரை அச்சுறுத்தி விட்டு சென்றதாக கூறப்படுகிறது.

அதன் பின்னர் மீண்டும் அதிகாலை வந்தவர்கள் கதவினை உடைத்து உள்நுழைந்து இளைஞரை குத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-60)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பதினொரு வட்டாரங்களிலும் வறுமை நிலையில் உள்ள பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டம் வழங்க நகர சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த புதன்கிழமை நகர சபையில் இடம்பெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரித்தல் தொடர்பான ஆர ம்ப கட்ட கலந்துரையாடலில் வாழ்வாதார உதவி வழங்க 11 இலட்சம் ரூபாயை ஒதுக் கீடு செய்ய தீர்மானித்திருப் பதுடன் அதற்கான அனுமதி கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைக்கவும் சபை தீர்மானித்துள்ளது. (4-5-30)

# 'தொல்லியல் ஆய்வு' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பிரிவினரால் நடத்தப்படும் "கந்தரோடை தொல்லியல் ஆய்வுகள்-ஒரு பன்முகப் பார்வை" எனும் நிகழ்வு இணையவழியூடாக நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் **webinar meeting ID 346899216, Passcode 1603@Saii** ஊடாக கலந்து கொள்ள முடியும்.(4-5)

# காக்கைதீவில் விபத்து இருவர் காயம்

(அராலி)

காக்கைதீவு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இரு வர் காயமடைந்துள்ளனர்.

காக்கைதீவு பிரதான வீதியால் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். (4-5-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 220 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 180 | 200 |
| தக்காளி | 500 | 450 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 200 | 140 | 170 | 200 |
| கரட் | 160 | 260 | 250 | 300 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 230 | 240 | 170 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-220 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 150-200 | 160 |
| பாகற்காய் | 600 | -- | 450 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 220 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 650 | 700 | 500 | 400 |
| லீக்ஸ் | 250 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 140 | 80. | 60 | 80 |
| கறிமிளகாய் | 350 | 350 | 320 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 300 | 400 |
| போஞ்சி | 350 | 350 | 380 | 480 |
| கத்தரிதம்புள்ள | 220 | 160 | - | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-90 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 230 | 250 |
| வெங்காயப்பூ | -- | 360 | - | 280 |
| முள்ளங்கி | 140 | 150 | - | 160 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 90 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | - | 120 |

# இளைஞன் மீது வாள்வெட்டு ஏழாலையில் சம்பவம்

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏழாலை பகுதியில் வசிக்கும் 23 வயது இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

குறித்த இளைஞன் தனது வீட்டு வாசலில் நின்ற வேளை ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இளைஞன் மீது வாள்வெட்டினை மேற்கொண்டனர்.

இதன்போது இளைஞனின் கையில் காயம் ஏற்பட்டது.

அதனை அடுத்து அவர் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (4-5-104)

# அதிகளவு மழைவீழ்ச்சி நெடுந்தீவில் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 119.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் கடும் மழையின் தாக்கத்தினால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (4-5-33)

# மக்களின் செயற்பாடுகளைப் பொறுத்தே பயணக் கட்டுப்பாடு குறித்து தீர்மானம்

## சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

**கொரோனா கட்டுப்பாட்டிற்கு மக்கள் வழங்கும் பங்களிப்பைப் பொறுத்தே பயணக் கட்டுப்பாடுகள் குறித்து தீர்மானிக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்

றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மிக உயர்ந்த நடவடிக்கைகளை எடுக்கும்போது மக்கள் தங்களின் உயரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வழங்குகின்ற பங்களிப்புக்கு அமையவே, தொற்று பரவல் கட்டுப்படுத்தப்படும்.

அத்துடன், சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப மக்கள் வாழும் சூழலை தயார் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## நனோ நைதரசன் திரவ உரத்தை அதிகமாக இறக்குமதி செய்ய அனுமதி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து நனோ நைதரசன் திரவ உரத்தை அதிகமாக இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு அனுமதியைப் பெறுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது, இதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், கூட்டெருவை இலவசமாக விநியோகிக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்:6'
கி.பா: 13 ½ செவ்10 இல் சூரி 10இல்
தகைமை/தொழில்:**BSc.MSc** அமெரிக்கா
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர். விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.
தொ.இ: **B/12119**

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: செவ் 10 இல் சூரி11இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: உயர்தரம் (வியாபாரம்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: **B/12120**

பிறப்பு:1990இந்து நட்சத்திரம்:பூரம்
கி.பா:-53 செவ் 7 இல் சூரி 10 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: **BA** (தமிழ் நிறுவனத்தில் பகுதி நேர வேலை
எதிர்பார்ப்பு:அரச வேலை தனியார் அல்லது சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/12121**

பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 48செவ் 10சூரி8இல் உயரம்:6'2"
தகைமை/ தொழில்:**N.D.B Bank**
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: **B/12122**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: மகம்
கி.பா: 42 செவ் 1சூரி3இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:. **MSc, Research Scholar, University (Private)**
எதிர்பார்ப்பு:படித்த நற்பண்புள்ள பெண்
தொ.இ:**G/12115**

பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்:ரேவதி
கி.பா:60செவ் 12சூரி10இல்
உயரம்:**165 cm**
தகைமை/தொழில்:**MBBS Doctor**
எதிர்பார்ப்பு:**-Doctor**
தொ.இ:**G/12124**

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:38 செவ்1சூரி10இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: **diploma in animal Hushangry**
எதிர்பார்ப்பு:தகுந்த தனியார், அரச உத்தியோகம்
தொ.இ:**G/12129**

பிறப்பு: 1998 இந்து நட்சத்திரம்:பூராடம்
கி.பா: செவ் 5சூரி5இல்
உயரம்:5'5'
தகைமை/தொழில்: உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ:**G/12131**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


## பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹில்டன் அம்மையாரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் குறித்த சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார். (நி-5)

## சிகிச்சைக்காக வெலிக்கடையில் ரஞ்சன்

(கொழும்பு)

நீதிமன்றை அவமதித்தமைக்காக 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அத்தண்டனையை அங்குண கொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் அனுபவித்து வரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உடற் கூற்று மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, பரிசோதனைகளின் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

மீண்டும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாயன்று தேசிய வைத்தியசாலையின் பரிசோதனைகளுக்கு உட்படுத்த மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதால், அவரை தொடர்ந்து வெலிக்கடையிலேயே தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)


# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## 2022ம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2022ம் திகதி தொடக்கம் 31.12.2022ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :15.11.2021 - 29.11.2021 திங்கட்கிழமை பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி :30.11.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :30.11.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :கலந்துரையாடல் மண்டபம்,தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

**கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.**

**2022ம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்ததொகை (வற்வரிதவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 29,326,044.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 116,007.54 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 146,678.81 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,343,650.55 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 488,119.50 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 426,303.57 |
| 4 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 135,090.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 135,090.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,781,345.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 842,270.00 |

**திரு. ப.மயூரன், தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.** (C-2997) **2021.11.13**

# போர்களை நிறுத்தி சமாதான முயற்சிகளை சர்வதேசம் இரட்டிப்பாக்க வேண்டும்

## 6 மாதங்களில் 84 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா.தகவல்

**(ஜெனிவா)**

**உலகின் பல பகுதிகளில் இடம்பெறும் வன்முறை, உறுதியற்ற தன்மை மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் இவ்வாண்டு முதல் 6 மாதங்களில் மட்டும் உலகளவில் கிட்டத்தட்ட 84 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டு முதல் காலாண்டுக்கான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விபரங்களை ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டது.

கடந்த டிசெம்பரில் இருந்து மக்கள் உலகம் முழுவதும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெரும்பாலும் உள்ளக இடப்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளன.

தீவிர மோதல்களில் இருந்து தப்பும் நோக்கில் அதிகளவான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக ஆபிரிக்காவில் இந்தப் போக்கு அதிகரித்துள்ளது எனவும் ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 எல்லைக் கட்டுப்பாடுகள் பல இடங்களில் புகலிடக் கோரிக்கைகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்துகின்றன.

வன்முறை, துன்புறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க சர்வதேச சமூகம் தவறி வருகிறது.

இது அதிகளவானோர் இடம்பெயர முக்கிய காரணியாக உள்ளது என ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் பிலிப்போ கிராண்டி குறிப்பிட்டார்.

இந்நிலையில் உலகில் போர்களை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தனது முயற்சிகளை சர்வதேச சமூகம் இரட்டிப்பாக்க வேண்டும்.

அதேநேரத்தில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் பிலிப்போ கிராண்டி வலியுறுத்தினார். (நி)



சீரற்ற காலநிலை காரணமாக சென்னை வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், சில இடங்களில் போக்குவரத்திற்குத் தடை ஏற்பட்டுள்ளது.

# செவ்வாய்க் கிரகத்தின் புதிய படங்களை வெளியிட்டது நாசா



(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தின் புதிய படங்களை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா வெளியிட்டுள்ளது.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் இருந்ததா? என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, 'பெர்சவரன்ஸ்' என்ற விண்ணூர்தியை செவ்வாய்க்கிரகத்துக்கு கடந்த ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி அனுப்பி வைத்தது.

கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிரகத்தில் 'ஜெசேரோ பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படும் பகுதியில் பெர்சவரன்ஸ் வெற்றிகரமாக தரையிறங்கியது.

செவ்வாயின் மேற்பரப்பில் உள்ள மண், கல் மற்றும் பாறைகளையும் இந்த விண்கலம் ஆய்வு செய்து வருகிறது.

இதற்கு முன் நாசா அனுப்பிய ஆர்பிட்டர்கள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் அடிப்படையில், இந்த குறிப்பிட்ட பள்ளத்தாக்கு பகுதியில் நீர் நிலைகள் இருந்ததற்கான ஆதாரம் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதியதால், இந்த 'ஜெசேரோ பள்ளத்தாக்கு' பகுதியை ஆய்வுக்காக நாசா தேர்ந்தெடுத்தது.

ஏற்கனவே 'பெர்சவரன்ஸ்' மூலம் எடுக்கப்பட்ட செவ்வாய்க்கிரகத்தின் பல புகைப்படங்களை நாசா வெளியிட்டு இருந்தது.

அந்த வகையில் தற்போது, முன்பு எப்போதும் கண்டிராத புதிய படங்களை பெர்சவரன்ஸ் ரோவர் நாசாவிற்கு அனுப்பியுள்ளது.

செவ்வாய்க்கிரகத்தின் மேற்பரப்பில் பாறைகளுக்கு இடையே உள்ள பள்ளமும் இதன்மூலம் முதல் முறையாக படம் பிடிக்கப்பட்டுள்ளது. அந்த படத்தினை நாசா வெளியிட்டுள்ளது. (நி-5)

# வெள்ளம் வந்தால் மிதக்கும் வீடு



(கேரளா)

மழை, வெள்ளம் வந்தால் 10 அடி உயரத்துக்கு மேலே எழும்பும் வகையில் வீட்டை வடிவமைத்திருக்கிறார் கேரளாவைச் சேர்ந்த பொறியியலாளரான கோபாலகிருஷ்ணன்.

இந்த வீடு வெள்ளம் வந்தால் சுமார் 10 அடி மேலே எழும்புமாம், வீட்டின் அடித்தளத்திற்கு கீழுள்ள நான்கு மூலைகளிலும் 4 பிஸ்டன்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், அடித்தளத்தில் கனமான ஜிஐ பைப்புகள் கொண்டு தரைத்தளத்திற்கான அரண் அமைக்கப்பட்டுள்ளது.

அதற்குக்கீழ் காற்றடைக்கப்பட்ட பரல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன,

வாகன தரிப்பிடம், கழிவறை தொட்டி என வெள்ளம் வந்தால் அனைத்தும் மேலெழும்பும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதாம்.

முதலில் எதிர்ப்புகள் இருந்தாலும், வீட்டைக் கட்டி முடித்த பின்னர் அனைவரும் தன்னை பாராட்டுவதாக நெகிழ்கிறார் கோபாலகிருஷ்ணன். (நி-5)

## மன்னாரில் திங்கள் முதல்

# இரண்டு தடுப்பூசி பெற்றவர்களுக்கு மட்டுமே பொது இடங்களில் நடமாட அனுமதி

## மன்னார் சுகாதார பணிப்பாளர் அதிரடி

(மன்னார்)

**மன்னாரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இரண்டு தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களே பொது இடங்களில் தங்கள் நாளாந்த நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படுவர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.**



மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேலும் ஐம்பது பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

கொவிட் தொற்று அதிகரிப்புக்கு பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் நடமாடுவது, சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது செயற்படுவது மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்ட ஆளணிகளுக்கு மேலாக இணைந்திருப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது.

மேலும் தற்பொழுது மன்னாரிலுள்ள காலநிலை, வைரஸ் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுவதால் மக்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு இரண்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவர்கள் மாத்திரமே நா௵ள மறுதினம் திங்கட்கிழமை முதல வியாபார நிலையங்கள், சந்தைகள், பொதுப் போக்குவரத்து, வாகன சேவைகள் ஆகியவற்றை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (4-5-285)

# சீரற்ற காலநிலையால் மீனவர்கள் பாதிப்பு



(மன்னார்)

தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடல் பகுதியில் வீசி வரும் அதீத காற்றுக் காரணமாக மூன்றாவது நாளாகவும் அதிகளவான மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை தவிர்த்துள்ளனர்.

மன்னார் தீவக பகுதிகளை சூழ்ந்த கடல் பரப்பின் நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்துக் காணப்படுகின்றமையினாலும் கடல் பகுதியில் அதீத காற்று வீசுவதனாலும் மீன்பிடி நடவடிக்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

அதேநேரம் உள்ளூர் மீனவர்களுடைய படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் அடையவிடப்பட்டுள்ளன. (4-5-285)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஏழாலையூர் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

தற்போது யாழ்.போதனா இரத்த வங்கியில் இரத்தத் தடுப்பாடு நிலவுகின்ற நிலையில் மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்குப் பூரண ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-18)

# கிளிநொச்சியில் இலவச குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடமாடும் சேவை

(நெளுக்குளம்)

கிளிநொச்சியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் வீடுகளுக்கான இலவச குடிநீர் இணைப்பை வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உதய நகர், கிழக்கு, மேற்கு மற்றும் ஆனந்தபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேற்படி மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை உத்தியோத்தகர்கள் வீடு வீடாக வருகை தரவுள்ளனர். எனவே புதிய நீர் இணைப்பு தேவைப்படும் பொதுமக்கள் விண்ணப்பப்படிவத்தை பெற்று வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி 155 கட்டை A-9 வீதியில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் கையளிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலக தொலைபேசி இலக்கமான 021 228 3981 தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)

# கோவிலிற்கு சென்ற பெண்ணின் தாலிக்கொடி மாயம்

(கரணவாய்)

யாழ்.தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு கடந்த புதன்கிழமை சூரன் போர் பார்க்க மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவரின் ஐந்தரைப் பவுண் தாலிக்கொடி ஆலயத்திலிருந்து வீடு வந்து சேர்ந்ததும் பார்வையிட்டபோது காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் கோவில் பாதுகாப்பிற்காக கடமையில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சென்று வாக்கு மூலம் ஒன்றையும் பதிவு செய்தார். (4-5-60)

## நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பருடன்

# மோதியது சைக்கிள்

## சிறுவன் படுகாயம்

(தருமபுரம்)

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவன் டிப்பர் வாகனத்தின் பின் பகுதியில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளான்.

குறித்த சிறுவன் பளை நோக்கி துவிச்சக்கர வண்டியில் குடை பிடித்து பயணித்துக் கொண்டிருந்த வேளை காற்றுக்கு குடை ம்டிந்து வீதியை மறைத்துள்ளது.

இதனால் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பர் வாகனத்தில் மோதியுள்ளான்.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் காவுவண்டி மூலம் கொண்டு செல்லப்பட்டான்.

குறித்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நேரடி கண்காணிப்பை மேற்கொள்ளுங்கள்

## பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தவிசாளர் கடிதம்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு, பனையடி, வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை, மாத்தளன் ஆகிய பகுதிகளுக்கு பொலிஸார் வருகை தர வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வட்டுவாகல் தொடக்கம் சாலை வரையான கிராமங்கள் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகமாக இடம்பெற்று வருவதாகவும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எவ்வித அச்சமுமின்றி செயற்படுகின்றனர்.

எனவே குறித்த சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டுமாயின் பொலிஸார் மேற்படி பிரதேசங்களுக்கு வருகை தர வேண்டும். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-350)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022



**எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் சிந்திக்கும் கன்னி இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.11.2021 முதல் 6 ஆம் இடத்திற்கு செல்கின்றார். 'ஆறில் குரு வந்தால் ஊரில் பகை' என்பது பழமொழி. ஆனால் உங்கள் இராசியை பொறுத்தவரை குரு பகவான் 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால், 'கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் ஆறில் வரும் பொழுது

கள் கூடுதல் சம்பளம் தருகிற வேலைக்கு முயற்சி செய்தால் அது கிடைக்கும்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டுவது அல்லது வீடு வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளுக்கு உங்கள் பணியில் திருப்தி இல்லாமல் போகலாம். இதனால், வேறு இடத்திற்கு மாறிக்கொள்ளலாமா? அல்லது சுய தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே நிதானத்தோடு செயற்பட வேண்டிய நேரமாகும். நிகழ்லது.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

இக்காலத்தில் நல்ல வாய்ப்புகள்




இல்லம் தேடி வரும். குரு பகவான் உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எனவே இடம் வாங்குதல், வீடு கட்டுதல் போன்ற வாய்ப்புகள் கைகூடிவரும். தாய்வழி ஆதரவு கிடைக்கும்.

கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடை பெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாட்டு முயற்சி

கூடுதல் கவனம் தேவை.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் விஷ்ணு -லக்ஷ்மி, படம்வைத்து லக்ஷ்மி கவசம் பாடி வழிபடுவது நல்லது. வாய்ப்பிருக்கும் பொழுது திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்,

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்,

இக்காலத்தில் கூடுதல் கவனத்தோடு செயற்படுவது நல்லது. தன

# ஆறில் வந்தது குரு பகவான் அமைதியும் நிதானமும் இனித்தேவை

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

யோகம் செய்யும்' என்பார்கள்.

எனவே அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குருவால் உங்களுக்கு நன்மை கிடைக்கும். அதன் பார்வை பலத்தால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்குமிடமாக 6 ஆம் இடம் கருதப்படுவதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் பாதிக்காது. எனவே குருவிற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்த குரு பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைந்து நன்மைகளைக் கொடுக்கலாம். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் முத்தான தொழில் அமையும். முன்னேற்றப் பாதையில் செல்ல வழிவகுத்துக் கொடுக்கும் உத்தியோகத்தில் உள்ளவர்

காலத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். தொழில் பங்குதாரர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ள மாட்டார்கள். எனவே கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. உடல் நலனில் கொஞ்சம் கவனம் தேவை.

**இராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022)**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் இராகு இருக்கின்றார். அது சுக்கிரனின் வீடாகும். இராகு சுயபலமற்ற கிரகம் என்பதால் அந்த ஸ்தானாதிபதிக்குரிய பலன்களையே வழங்கும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடை பெறும். உடன்பிறப்புகளை அனுசரித்துக் கொள்வது நல்

யில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**இராகு-கேது பெயர்ச்சிக்காலம்**

குருப்பெயர்ச்சிக் காலத்தில் 21.3. 2022 இல் இராகு -கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் இராகு பகவான் சஞ்சரித்து வந்தார்.

சகாய ஸ்தானத்தில் கேது பகவான் சஞ்சரித்தார். இப்பொழுது இரண்டாமிடத்தில் கேதுவும், எட்டாமிடத்தில் ராகுவும் வருகிறார்கள். இந்த மாற்றம் நல்ல மாற்றம் தான். மறைந்த ராகுவால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும்.

என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது விலை உயர்ந்து உங்களை செல்வந்தராக்கலாம். தன ஸ்தானத்தில் கேது இருப்பதால் குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும். ஆரோக்கியத்தில் மட்டும்

ஸ்தானத்தில் உள்ள செவ்வாய், பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் உள்ள சனியைப் பார்க்கின்றது. சனியும் செவ்வாயும் பார்ப்பதால் குடும்பத்தில் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கலாம். சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் முடிவு கிடைக்க தாமதப்படும். தனவிரயம் உண்டு. உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க இயலாது. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும்.

**பெண்களுக்கான பலன்கள்**

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன்-மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதிப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வுடன்கூடிய புதிய வேலை கிடைக்கலாம். சக்கரத் தாழ்வார் வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

(தொடரும்).

# டெங்கு தீவிரம்! மக்களே அவதானம்!

## தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனாவுக்கு மத்தியில் நாட்டில் டெங்கு காய்ச்சல் தொற்று நோயாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**



டெங்கு வைரஸின் நான்கு வகைகளும் தற்போது இலங்கையில் பரவியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் மருத்துவர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலையில், வீட்டுச் சூழல் உட்பட நுளம்புகள் பெருகும் அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொதுமக்களை அவர் வலியுறுத்தினார்.

நாடளாவிய ரீதியில் தற்போது 23 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஃபிபா தலைவர் இலங்கை விஜயம்




(கொழும்பு)

சர்வதேச கால்பந்து அமைப்பான "ஃபிபா"வின் (FIFA) தலைவர் கியானி இன்ஃபான்டினோ இலங்கை வருகை தரவுள்ளார். இம்மாதம் 19 ஆம் திகதி கொழும்பின் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடைபெறும் மகிந்த ராஜபக்ஷ கிண்ணத்திற்காக, நான்கு நாடுகள் பங்கேற்கும் இறுதிப் போட்டியில், இவர் விருந்தினராக கலந்து கொள்வார். நவம்பர் 9 ஆம் திகதி ஆரம்பித்த இந்த போட்டிகளில் இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் சீஷெல்ஸ் அணிகள் பங்கேற்கின்றன. வெற்றி பெறும் அணிக்கு வெற்றியாளர் கிண்ணத்துடன் 30,000 அமெரிக்க டொலர் ரொக்கப் பரிசும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

### 24 வருடங்களின் பின்

### பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பெண் பொலிஸ் அதிகாரி நியமனம்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் வரலாற்றில் 24 வருடங்களின் பின்னர் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி கம்பஹா-நால்ல பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக தலைமைப் பொலிஸ் பரிசோதகர் காஞ்சன சமரகோன் நியமிக்கப்பட்டுள்ளார். (நி-5)

# 20 ஆவது திருத்தத்தால் ஜனநாயகம் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

"இலங்கையில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தால் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றமும் தபாலகமாக மாற்றப்பட்டுள்ளது" என சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தால் எதிர்ப்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்தும்கூட 20 ஐ வைத்துக்கொண்டு பொருட்களின் விலையைக்கூட கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையே காணப்படுகிறது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வராமல் இருந்திருக்கலாம் என்பதே எனது கருத்து. அதன்மூலம் ஜனநாயகம் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

20 ஆல் பாராளுமன்றம் தபாலகம் போல் உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமும் முழுமையானது என நான் கூறமாட்டேன். எனினும், அதன் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய பயங்கரமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசமைப்பு பேரவை அமைக்கப்பட்டு, உயர் பதவிகளுக்கான நியமனங்கள் உரிய வகையில் இடம்பெற்றன" என அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## பயில வேண்டிய பாடம்

யாருமே நல்லவர்களல்லர்; யாருமே கெட்டவர்களல்லர். என்ன பிதற்றுகிறீர்கள்? என்று கேட்பீர்கள். பிதற்றவில்லை உண்மை. மனிதர்களின் மனத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். மேலோட்டமான பகுதியில் மனிதன் நல்லவன்.

அடுத்த நிலையில் அவன் பொல்லாதவன். அடி மனதில் அவன் நல்லவன். ஆழ்மனதில் அவன் ஒரு கொடுமையான மனத்தினன்.

அவனது இந்த நான்காவது நிலையை அவனோடு பல வருடங்களாகவே வாழ்ந்த அவனது மனைவி கூட அறிந்திருக்க மாட்டாள். (அல்லது கணவன் கூட அறிந்திருக்க மாட்டான்). இந்தச் சனியன் ஒழிந்தால் தேவலை என்று கணவன் உள்ளூர எண்ணிக் கொண்டிருப்பான். மனைவியோ, தன் கணவன் தன் மீது உயிரையே வைத்து இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருப்பாள்.

ஒருவன் நம்மைப் பொறுத்த அளவில் நல்லவனாக விளங்க அவனது அடிமனதைத் தொடும்படி பழக வேண்டும். அவனது ஆழ்மனதைச் சோதனை செய்யும் முயற்சியில் இறங்கக் கூடாது. காரணம், ஆழ்மனதில் அவன் கெட்டவன் தான். அதில் உங்களுக்குத் துளியும் ஐயம் வேண்டாம்.

உங்கள் நண்பர் ஒருவரை நீங்கள் மிகவும் நல்லவர் என்று புகழ்கிறீர்கள். ஆனால், வேறு ஒருவரோ இடை மறித்து, அவரைப் போல் பொல்லாதவரை நான் கண்டதில்லை என்று முற்றிலும் மறுக்கிறார் என்றால் இவற்றுள் எது உண்மை? இரண்டுமே உண்மை தான்.

முன்பு சொன்ன மனத்தின் நான்கு நிலைகள் என்ற விதியை இங்கு நினைவுபடுத்திப் பாருங்கள். அந்த மனிதர் இரண்டாவது நிலையையும் நான்காவது நிலையையுமே சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். இது அவரவர்களின் அணுகு முறையைப் பொறுத்த விடயம்.

நீங்கள் அறிந்திராத ஒருவரை நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ மற்றவர்கள் சொன்னால் நீங்கள் அதை நம்ப வேண்டாம். அப்படி நம்புவது என்பது, ஒரு நீதிபதி வழக்கை விசாரிக்கும் முன்னரே ஒருவனைக் குற்றவாளி என்று முடிவுக்கு வருவதற்கும் மேலான குற்றமாகும். மற்றவர்கள் நம்மைப் பொறுத்தளவில் நல்லவர்களாக நடந்து கொள்வது தான்.

நாம் நல்லவர்களாகி விடுவோமானால் அவர்கள் இரசம் பூசப்பட்ட கண்ணாடி போல் ஆகி, நம் நல்ல குணங்களையே பிரதிபலிப்பார்கள்.

புராணத்தில் ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. தருமரின் கண்ணுக்குப் பொல்லாதவர்களே தென்படவில்லையாம். துரியோதனின் கண்ணுக்கு வல்லவர்களே தென்படவில்லையாம்.

இந்த உண்மை உணராதவர்கள் தாம், இந்த உலகம் மிகப் பொல்லாதது என்கிறார்கள்.

உணர்ந்தவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## செங்கல் வீடு

ஓநாயின் சூழ்ச்சி பன்றிக்குட்டிக்குப் புரிந்தது. "சுவையான முள்ளங்கியா? எங்கே விளைந்து உள்ளது? நாம் எப்போது அங்கே போகலாம்?" என்று ஏதும் அறியாதது போலக் கேட்டது.

"முனியனின் நிலத்தில்தான் விளைந்து உள்ளது. நாளை காலையில் நாம் இருவரும் அங்கே போவோம்" என்றது ஓநாய்.

"எத்தனை மணிக்கு நீ இங்கே வருவாய்?"

"காலை ஆறு மணிக்கு இங்கேஇருப்பேன்"என்று புறப்பட்டது ஓநாய்.

மறுநாள் காலையில் நான்கு மணிக்கு முனியனின் நிலத்தை அடைந்தது பன்றிக்குட்டி. அங்கிருந்த முள்ளங்கிகளைப் பறித்த அது வீட்டிற்குக் கொண்டு வந்தது.

ஆறு மணிக்கு அங்கு வந்தது ஓநாய். வீட்டுக் கதவு தாழிடப்பட்டு இருப்பதைப் பார்த்தது.

"பன்றிக் குட்டியே! நாம் புறப்படலாமா?" என்று கேட்டது.

சிரித்த பன்றிக்குட்டி, "ஓநாயே! நான்கு மணிக்கே நான் சென்று முள்ளங்கிகளைப் பறித்து வந்து விட்டேன். ஆ! என்ன சுவை! நீ அங்கே போனால் ஒரு முள்ளங்கியும் கிடைக்காது" என்றது.

இந்தப் பன்றிக்குட்டி என்னை ஏமாற்றி விட்டதே... இதை எப்படியும் கொன்று தின்ன வேண்டும்" என்ற வெறி அதற்கு ஏற்பட்டது.

அந்த வீட்டுச் சுவரில் வேகமாக மோதியது. சுவர் சிறிதும் அசையவில்லை. உடல் வலிதான்



அதற்கு ஏற்பட்டது. "பன்றிக்குட்டியைக் கொல்ல வேறு சூழ்ச்சிதான் செய்ய வேண்டும்" என்று நினைத்தது.

"பன்றிக்குட்டியேசுவையான மாம்பழங்கள் ஒரு மரத்தில் பழுத்துத் தொங்குகின்றன. அப்படிப் பட்ட பழங்களை நீ சாப்பிட்டே இருக்க முடியாது" என்று இனிமையாகப்பேசியது. "ஓநாயே! அந்த மாமரம் எங்கே உள்ளது?

"பொன்னியின் தோட்டத்தில் உள்ளது. நாளை காலை ஆறு மணிக்கு இங்கு வருவேன். நாம் இருவரும் அங்கேசென்று மாம்பழங்களைச் சுவைத்து உண்ணலாம். இன்று போல என்னை ஏமாற்றிவிடக் கூடாது" என்று புறப்பட்டது ஓநாய்.

மறுநாள் காலையில் மூன்று மணிக்கே எழுந்தது பன்றிக்குட்டி. "ஓநாயை இன்றும் ஏமாற்ற வேண்டும்" என்று நினைத்தது.

பொன்னியின் தோட்டத்தை அடைந்த அது மாமரத்தின். மேல் ஏறியது. மாம்பழங்களைப் பறித்துத் தின்றது. ஓநாயின் குரல் கேட்டுத் திகைப்புடன் கீழே பார்த்தது. அங்கே ஓநாய் நின்றிருந்தது.

"பன்றிக்குட்டியே! நீ இப்படி என்னை ஏமாற்றுவாய் என்பது தெரியும். அதனால்தான் முன்னரே இங்கு வந்தேன். இனி உன்னால் என்னிடமிருந்து தப்ப முடியாது" என்று மிரட்டியது. (தொடரும்)

# மகாபாரதம்

243



இப்போது மாமுனிவர் யானையை சிங்கமாக மாற்றினார். இந்த சிங்கத்தைக் கண்ட வந்த சிங்கம் திரும்பியது. புதிய சிங்கம் காட்டு விலங்குகளுக்கு அச்சத்தை உண்டாக்கியது. அதைக் கண்டு அஞ்சிய விலங்குகள் அந்த ஆசிரமத்தின் பக்கமே வருவதில்லை.

ஆனால் வனவிலங்குகளில் வலிமை மிக்க சரபம் என்னும் மிருகம் ஆசிரமத்தின் அருகே வந்தது. அதனை எதிர்க்கும் ஆற்றல் சிங்கத்துக்குக் கூட கிடையாது.

எட்டுக்கால்களுடன் நடைபோட்டு அது வரும் போது அனைத்து மிருகங்களும் பயந்து ஓடும். நாயாக இருந்து சிங்கமாக மாறிய விலங்கையும் பயம் விடவில்லை. சரபத்தைக் கண்டதும் அது மீண்டும் முனிவரை நாடியது.

முனிவரும் அதையும் வலிமை மிக்க சரபமாக்கினார். புதிய சரபம் புதுத் தோற்றத்துடன் நிகரற்று திகழ்ந்தது. இரத்த வேட்டையாடியது. அதைக்கண்டு அனைத்து விலங்குகளும் பயந்து ஓடின.

புதுப்பிறவி எடுத்த சரபம், திடமான ஒரு முடிவுக்கு வந்தது. இறுமாப்புடன் தன்னையே ஒருமுறை சுற்றிப் பார்த்துக் கொண்டது.

அந்தக் காட்டில் தன்னை யாரும் அசைக்க முடியாது என்று கருதிய அதற்கு ஒரு ஐயம் எழுந்தது. ஐயம் வஞ்சனையானது. வஞ்சனை கொடுமையானது.

"இந்த முனிவரின் கருணையால் பல ஆபத்துகளிலிருந்து தப்பினேன். நாயாக இருந்து படிப்படியாக சரபமாக மாறினேன்.

இப்போது என்னை விட பலம் மிகுந்த விலங்கு இல்லை. இந்த முனிவர் கருணை மிக்கவர். இந்தக் கருணையே எனக்கு ஆபத்தாக முடியலாம்.

இரக்கம் உள்ள இவர் மற்ற விலங்குகள், பறவைகளைக் கூட என்னைப்போல மாற்றலாம்.

அப்போது எனக்கு அதிக எதிரிகள் உண்டாவார்கள். அப்படி ஏற்படாமல் இருக்க ஒரே வழி. இந்த முனிவரை தீர்த்துக் கட்ட வேண்டியது தான். இவரைக் கொல்வது தவிர வேறு வழியில்லை. என்று நினைத்தது.

சரபத்தின் வஞ்ச எண்ணத்தை தன் தவ வலிமையால் முனிவர் அறிந்தார். அந்த சரபத்தை நோக்கி "தவத்தால் உயர்ந்த என் ஆற்றலை நீ உணரமாட்டாய். அனைத்து உலகும் என்னைக் கண்டு அச்சம் கொள்ளும்.

தரும நெறியிலிருந்து விலகும் யாரையும் நான் அழித்து விடுவேன். நாயாகக் கிடந்த நீ, சிறுத்தைப் புலியாக, பெரும் புலியாக, யானையாக, சிங்கமாக, சர்ப்பமாக மாறினாயே. அதெல்லாம் நானெல்லவா மாற்றி உன்னை ஆபத்திலிருந்து காத்தேன்.

கொஞ்சமும் நன்றியின்றி என்னைக் கொலை செய்யத் தீர்மானித்தாயே! நீ மீண்டும் நாயாவாய்" என்று சபித்தார்.சரபம் மீண்டும் நாயானது.

ஒருவரைப் புரிந்து கொள்ளாமல் அவருக்கு நன்மை செய்யும் போது கூடத் தவறு நேரிடலாம்.

(தொடரும்)

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல்.
- ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இந்தியாவால் இலங்கையை எதுவும் செய்ய முடியாது!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அதில் அன்றைய இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் ஒப்பமிட்டனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கை ஆட்சியாளர்களுக்கோ அன்றி சிங்களப் பேரினவாதிகளுக்கோ உடன்பாடானதாக இருக்கவில்லை.

இருந்தும் இந்தியாவைச் சமாளிப்பதாக இருந்தால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தவிர்க்க முடியாது என்ற அடிப்படையிலேயே ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒப்பந்தத்துக்கு உடன்பட்டார்.

இவ்வாறு ஜே.ஆர்.ஜெயவர்த்தன உடன்படுவதற்குக் காரணமாக இருந்தவர் இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி என்பது இங்கு நினைவுபடுத்தற்குரியது.

அதாவது அன்னை இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தபோது அண்டை நாடுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

இதனால் இந்தியாவை மீறி அண்டை நாடுகள் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைமை அப்போதிருந்தது.

அதிலும் குறிப்பாக இலங்கை போன்ற சிறிய நாடுகள் இந்தியாவின் காலடியில் கிடந்தன எனலாம்.

தவிர, பாகிஸ்தான் மீது போர் தொடுத்து பங்களாதேஷை பிரித்த இந்திரா காந்தியின் வல்லமை அண்டை நாடுகளுக்கு மிகப் பெரும் பயப்பீதியை ஏற்படுத்தியிருந்தது.

அந்தப் பயப்பீதியின் அடிப்படையிலேயே ராஜிவ் காந்திக்கும் இலங்கை கட்டுப்பட்டதெனலாம்.

எனினும் அரசியல் இராஜதந்திரத்தின் அடையாளமாகப் பார்க்கப்படும் ஜே.ஆர். ஜெயவர்த்தன இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகத் தனது இலக்கை அடைவதற் கான வியூகத்தை உருவாக்கினார்.

அவரின் இராஜதந்திர வியூகம் வெற்றியும் பெற்றதெனலாம்.

ஆம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியதை அடுத்து, இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்தது.

அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அஃது ஏற்படுத்திய எதிர்மறைத் தாக்கங்களும் ஜே.ஆரின் நரித்தந்திரத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டது.

இந்த இடத்தில்தான் ராஜிவ் காந்தியின் வயதும் எனது அரசியல் அனுபவமும் ஒன்று என ஜே.ஆர்.ஜெயவர்த்தன அப்போது கூறியிருந்தார்.

இவ்வாறு இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களும் இந்தியா தொடர்பில் இலங்கையை உசாராக்கியது.

அதன்விளைவுதான் சீனாவுடனான இலங்கையின் அதீத உறவு எனலாம்.

இங்குதான் இலங்கை இந்தியாவுக்குப் பலத்த தலையிடியாக மாறியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில்; இந்தியாவின் முக்கியத்துவத்தை இலங்கை இப்போது புரிந்து கொண்டுள்ளது என இந்தியா கருதுமாயின், அது கற்பனை வியாதியின் உச்சம் எனலாம்.

# பிரதித் தலைவர் பதவியை நிராகரித்தார் சம்பந்தன்

இந்திய - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

அதில் 125 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது இந்திய - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டபோதிலும் அவர் அந்த பதவியை நிராகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்குமிடையில் அண்மையில் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# வவுனியாவில் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடமாடும் சேவை

(நெலுக்குளம்)

வவுனியாவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பை வழங்குவதற்கான நடமாடும் சேவையானது இன்று சனிக்கிழமை இராசேந்திரகுளம், சூடுவெந்த பிளவு, சாம்பல் தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை திருநாவற்குளம், சுந்தரபுரம் (முன் ஒழுங்கை) ஆகிய பிரதேசங்களிலும் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வவுனியா அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய நீர் இணைப்பு தேவைப்படும் பொது மக்கள் விண்ணப்பப் படிவத்தை பெற்று வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தங்களது இருப்பிடங்களிலேயே வைத்திருக்குமாறும் இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா பொறுப்பதிகாரி அலுவலக தொலைபேசி இலக்கமான 024 324 8025 இற்கு தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்." -தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கொமர்ஷல் வங்கி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர் மானிப்பாய், கார்கில்ஸ் மானிப்பாய், அம்மன் வீதி, கந்தர்மடம், ஆரியகுளம்- பருத்தித்துறை வீதி, இலுப்பையடிச்சந்தி, பலாலி வீதி, பிஸா ஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ். மருத்துவமனை பலாலி வீதி, அவுனோர் (PVT) லிமிடெட், தம்றோ, ஐபிசி தமிழ், நொதேர்ன் மருத்துவமனை, சூரிய உதயம் (வீனஸ் வைத்திய சாலை), பி.சி.சி.ஏ.எஸ். கல்லூரி, பலாலி வீதி சிவன் அம்மன் வீதிச் சந்தி, கொமர்ஷல் வங்கி பலாலி வீதி, பனிக்கர் லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை, வெளிவாரி பட்டப் படிப்புக்கள் நிலையம், திண்ணை விடுதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கறுப்பிக்குளம், கோவிந்தன்கடைச்சந்தி, மாயவனூர், பன்னங்கண்டி, இராமநாதபுரம், சின்னச்சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி, வட்டக்கச்சி நன்னீர் மீன் உற்பத்தி, இரணைமடு, வட்டக்கச்சி பண்ணை விமானப்படை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, நளவன் பாடி, புதுத் தெரு (பள்ளிமுனை), இளையோர்சேவைமையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா டெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி. மைதானம், மன்னார், மன்னார் ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## நல்ல காலம் வருகிறது

❖ சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிக்கான ரகசியம்.

❖ ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதே அளவிற்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம்.

❖ தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட போராடி மாள்வதே மேலானது. நீ ஒருபோதும் அழக்கூடாது.

❖ ஒரு லட்சியத்தை எடுத்துக் கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக் கொள். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்ல காலம் நிச்சயம் வரும்.

❖ சுயநலத்துடன் வாழாமல், "நான் அல்லேன் நீயே" என்னும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படை பண்பு.

❖ உன்னால் எல்லாருக்கும் சேவை செயய முடியும். அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்கு கிடைத்திருக்கிறது.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

16

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



## நீங்களும் முயற்சிக்கலாம் 8



**இதன் பெறுமானம் என்ன?**

**விடை**

**30000x2+1000x1+100x3+ 10x4+1x2 = 61342**

## ஏஜியன் எண்கள்

### சுவாஷ் எண்கள் (Chuvash numerals)

சுவாஷ் எண்கள் பழைய துருக்கிய எழுத்தின் எண் அமைப்பிலிருந்து உருவாக்கப்பட்டு 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர் இந்து-அரபு எண்கள் (1, 2, 3) பயன்படுத்தப்படுகின்றன. உரு 3 ஐப் பார்க்க. இந்த எண்கள் விரல் எண்ணிக்கையிலிருந்து உருவாகியவை. அவை ரோமானிய எண்களைப் போல இருக்கின்றன, ஆனால் பெரிய எண்கள் வலது பக்கத்தில் இருக்கும். அந்த எண்களை மரத்தில் செதுக்குவது சாத்தியமானது.

**உரு 3 சுவாஷ் எண்கள் (Chuvash numbers)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | II | III | IIII | / | I/ | II/ | III/ | IIII/ | X |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| IX | IIX | IIIX | IIIIX | /X | I/X | II/X | III/X | | |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | | |
| IIII/X | XX | IXX | XXX | XXXX | ⋇ | | | | |
| 19 | 20 | 21 | 30 | 40 | 50 | | | | |
| X⋇ | XX⋇ | XXX⋇ | XXXX⋇ | | | | | | |
| 60 | 70 | 80 | 90 | | | | | | |
| ✳ | ✳` | * | | | | | | | |
| 100 | 500 | 1000 | | | | | | | |

**IIIX இதன்பெறுமானம்என்ன? சுவாஷ் எண் முறைமையில் இதன் பெறுமானம் 13 ஆகும். அப்படியாயின் XIII இதன் பெறுமானம் என்ன? உரோமன் எண் முறைமையில் இதன் பெறுமானம் 13 ஆகும். சுவாஷ் எண் முறைமையில் பெறுமானம் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் கூடிச் செல்லும். உரோமன் எண் முறைமையில் பெறுமானம் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் [illegible]ும.**

### மியூஸ்கா எண்கள் (Muisca numerals) (15 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது)

சிப்சா மொழி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழு, இப்போது கொலம்பியாவில் போகோட் நதி பள்ளத்தாக்கில் வசித்து வருகிறது, இது முய்கா என்றும் அழைக்கப்படுகிறது, இது பண்டைய அமெரிக்காவின் வளர்ந்த கலாசாரங்களில் ஒன்றை உருவாக்கியது. ஐரோப்பியர்கள் படையெடுக்கும் நேரத்தில், பல பயிரிடப்பட்ட தாவரங்கள் மியூஸ்காவை வளர்த்துக் கொண்டிருந்தன. மியூஸ்கா எண்கள் (Muisca numerals) ஸ்பெயின், மியூஸ்காவைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அமெரிக்காவின் நாகரிகங்களில் ஒன்றான மியூஸ்கா பயன்படுத்திய எண் குறியீட்டு முறை ஆகும்.

மாயாக்களைப் போலவே, முய்காவும் இருபதை அடியாகக் கொண்ட (20 மடங்குகளின் அடிப்படையில்) எண் முறைமையை கொண்டிருந்தது. மியூஸ்கா எண்கள் விரல்கள் மற்றும் கால் விரல்களால் எண்ணுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தன. எண்கள் முதன்மையாக விரல்களால் மற்றும் இரண்டாவதாக அவர்களின் கால் விரல்களால் எண்ணப்பட்டது. அவற்றின் அமைப்பு 1 முதல் 10 வரை சென்றது, மேலும் அதிக எண்ணிக்கையில் அவர்கள் “கால்” விரல்களைப் பயன்படுத்தினர். பதினொன்று “கால் ஒன்று”, பன்னிரண்டு: “கால் இரண்டு”, எண்ணத் தொடங்கினர். விரல்கள் மற்றும் கால் விரல்கள் மொத்த எண்ணிக்கை 20 ஆகும். உரு 4 ஐப் பார்க்க.

**உரு 4 மியூஸ்கா எண்கள் (Muisca numerals)**




இதுபற்றிய மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை.

### கிளாகோலிடிக் எண் முறைமை (Glagolitic Numerals)

பழைமையான கிளாகோலிடிக் எழுத்துக்கள் (Glagolitic script), ஸ்லாவிக் (Slavic) எழுத்துக்கள் என அழைக்கப்பட்டன. இவ்வெழுத்துக்கள் 9 ஆம் நூற்றாண்டில், தெசலோனிகியைச் சேர்ந்த புனித சிரில் என்ற துறவியால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. வழிபாட்டுப் புத்தகங்களைப் பொதுமக்களுக்கு புரிந்துகொள்ள வைக்கும் முகமாக இம்மொழி உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புனித சிரில் துறவியின் இறப்புக்கு பிறகு, மொராவியாவில் அரசியல் அல்லது மதத் தேவைகளுக்காக கிளாகோலிடிக் எழுத்துக்கள் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டது. கிளாகோலிடிக் மற்றும் சிரிலிக் எழுத்துக்கள் இரண்டும் 13 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை பல்கேரியாவில் பயன்படுத்தப்பட்டன. சிரிலிக் எழுத்துக்கள், (கிளாகோலிடிக் எழுத்துக்களிலிருந்து சில எழுத்துக்களை கடன் வாங்கி உருவாக்கப்பட்டது), 9 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிரெஸ்லாவ் (Presla) இலக்கிய பள்ளியில் உருவாக்கப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சேர்ச் ஸ்லாவோனிக் (Church Slavonic) எழுத குரோஷியா மற்றும் டால்மேஷியாவின் மதகுருமார்களால் மட்டுமே கிளாகோலிடிக் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. அக்காலத்தில், கிளாஹோலிடிக் மொழி, போஹேமியா, பனோனியா, மொராவியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் பரவியதாகக் கருதப் படுகிறது. அசல் கிளாகோலிடிக் எழுத்துக்களில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை தெரியவில்லை, ஆனால் அது கிரேக்க எழுத்து மாதிரியுடன் நெருக்கமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இன்று அறியப்பட்ட 41 எழுதுக்களில் கிரேக்க அல்லாத ஒலிகளுக்கான எழுத்துக்களும் அடங்கும், அவை சிரில் துறவியால் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

**எண்களை எழுதுவதற்கு,**

கிளாகோலிடிக் எண்கள் ஒவ்வொன்றிற்கும் சொந்த பூர்வீக அகர வரிசையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட எண் பெறுமானத்தைக் கொண்ட எழுத்துக்கள் பயன்படுத்துகின்றன. இது சிரிலிக் எண்களிலிருந்து வேறுபடுகிறது,` ஏனெனில் அவை அவற்றின் எண் பெறுமானத்தை அதனுடன் தொடர் புடைய கிரேக்க எழுத்திலிருந்து பெற்றன. கிளாகோலிடிக் எண் முறைமையை உரு-5 காட்டுகிறது. (தொடரும்)

## நீங்களும் முயற்சிக்கலாம் 9


ன்

**பெறுமானம் என்ன?**

**விடை 700+90+3= 793**

## கிளாகோலிடிக் எண்முறைமை

## பட்ஜெட்...

வுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கும் அமர்வுக்கு வருகை தந்திருந்தனர். இதன் போது மதியபோசன இடைவேளை நேரத்திலேயே சந்தித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அமெரிக்கா செல்ல உள்ள நிலையில் அரசாங்கத்தை காப்பாற்றவே அவர்கள் அமெரிக்கா செல்லவுள்ளதாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் சுமந்திரன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடுவது போன்ற புகைப் படங்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மதுபானம்...

ஒன்றுக்கான விலை 5 ரூபாயினால் அதிகரிக்கப்படும் என நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் பாதீட்டை சமர்ப்பித்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மது வரியும் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

25 மில்லியன் ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்து இது நடைமுறைப்படுத்

தேசிய லொத்தர் சபை ரிக்கெட்
விற்பனை
உதவியாளர் தேவை
கிளிநொச்சி மாவட்ட நகர்ப் பகுதிகளில்
தேசிய லொத்தர் சபை ரிக்கெட்டுக்களை
விற்பனை செய்ய ஆட்கள் தேவை.
கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும்.
(8585)
தொ.பே: 077 261 4549, 077 518 9569

மெகா பவர்
திகதி 12/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0932
வெற்றி எழுத்து M சுப்பர் இலக்க 14 வெற்றி இலக்கங்கள் 31 41 59 78

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/12 சீட்டிழுப்பு இலக்கம் 1632
சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 01 37 42 49
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2021/11/12
சீட்டிழுப்பு இலக்கம் 4584
ஆங்கில எழுத்து C வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 3 0 9 5 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 12.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2879
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 08 54 72 73
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.11.12
சீட்டிழுப்பு இலக்கம் - 614
T 07 10 20 35
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

தப்படுவதாகவும் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## வடக்கு மாகாண...

வளி தினத்தை முன்னிட்டு விசேட விடுமுறை வழங்கப்பட்டதற்கான பதில் பாடசாலை இன்றைய தினம் இடம்பெறும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-3,33)

## காணாமல்போன...

தாபிமானமற்ற வகையில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டனர்.

அவர்களது மனோநிலையினை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அக்காலப்பகுதியில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது எமது கடப்பாடாக மாறியுள்ளது என்றார். (ம-3)

## ரூ.3 ஆயிரம்...

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தற்போது இடம்பெற்றுவரும் 2021ஆம் ஆண்டிற்கான சமகால அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்ட உரையில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் தனது உரையில்,

ஆசிரியர் - அதிபர் சேவைகளின் சம்பள முரண்பாட்டினை நீக்குமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்து அரசாங்கத்தின் மூலம் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2021.8.30ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினை விரைவாக செயற்படுத்துவதற்காக மேலும் ரூபாய் 30 ஆயிரம் மில்லியனை சம்பளமாக உட்சேர்ப்பதற்கு முன்மொழியப்படுகிறது.

இது ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பளம் தொடர்பாக தற்பொழுது செலவிடப்படுகின்ற ரூபாய் 109 ஆயிரம் மில்லியனுக்கு அதிக தொகையினை விட மேலதிக ஒதுக்கீடாகும்.

தற்பொழுது பயிலுநராக அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு 2022 ஜனவரி மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## மக்கள் மீது...

யான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம், ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் இறுதி பாதீடாகவே அமையுமென எதிர்க்கட்சியினர் ஆரூடம் கூறியுள்ளனர். (ம-3)

## மக்களுக்கு...

பத்தால் இலங்கையை இனியும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது எனவும் ஆகவே அந்த இயலுமையைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறும் அந்தக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 2022ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு எவ்வித சலுகையும் வழங்கப்படவில்லையென தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மாலை கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# முல்லைத்தீவில் வீடு புகுந்து 8 பேர் கொண்ட கும்பல் தாக்குதல்

## நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இரணைப்பாலை 5ஆம் வட்டாரப் பகுதியில் 8 பேர் கொண்ட கும்பல் வீடு புகுந்து அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் நேற்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8 பேர் கொண்ட கும்பலொன்று வீட்டிற்குள் புகுந்துள்ளதுடன், அதில் 4 பேர் வீட்டின் வெளியில் நிற்க ஏனைய 4 பேர் வீட்டின் கதவினை உடைத்து உள்ளே புகுந்து வீட்டில் இருந்த பெண் மீது (50 வயது) தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் அதில் குறித்த பெண் காயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை 21 வயது இளைஞரொருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு அங்கிருந்த தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## அரச செலவீனங்...

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, குறித்த வரவு - செலவுத் திட்ட யோசனைக்கு அமைய இம்முறை எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 2,284 பில்லியன் ரூபாயாகும்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்படி, மதிப்பிடப்பட்ட மொத்த செலவீனம் 3,912 பில்லியன் ரூபாயாகும். இதன்படி, வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபாய் 1,628 பில்லியன் அல்லது 8.8% ஆகும்.

புதிய அரச அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள் 2 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் தொலைபேசி செலவீனங்கள் நூற்றுக்கு 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஓய்வூதியம் கிடைக்கப் பெறவேண்டுமாயின் புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 10 வருடங்கள் கடமையாற்றி இருக்க வேண்டும்.

இதில் ஜனாதிபதி பதவி உள்ளிட்ட அனைவரும் அடங்குவர்.

அரச உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் மானியம் 5 லீற்றரால் குறைப்பு.

15 சதவீதமாக இருந்த வற் 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வங்கி, நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இந்த வரி அறவிடப்படும். நுகர்வோரிடம் இருந்து அதிகரிக்கப்படமாட்டாது.

விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் முன்னின்று செயற்படும். விவசாயப் பொருட்களுக்குரிய விலை கிடைப்பதற்கும் தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கும் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

இயற்கை உர தயாரிப்பை மேம்படுத்துவதற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக

அதனை முன்னெடுக்க முன்மொழியப்படும்.

இளைஞர்களை வேலை தேடுபவர்களாக அல்லாமல் தொழில் வழங்குநர்களாக மாற்றும் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்றார். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1387
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 12.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,789,392
வெற்றி இலக்கங்கள் 01 37 55 66 ஆங்கில எழுத்து M
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3722
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 12.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,013,992.30
வெற்றி இலக்கங்கள் 09 46 48 74 ஆங்கில எழுத்து R
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 5,759,780.60/=
திகதி : 12.11.2021
வெற்றி வாரம் : 3273
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 08 34 44 55 கடகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,867,320.00/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1561
நிறம்
சீட்டிழுப்பு திகதி 12.11.2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 16 18 52 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,825,090.00/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த.சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 0112 333 546-47
தரித்த அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
குறுந்தகவல்: DLB<space>LOT<space>SB send 1919
தானியங்கி குரல் சேவையின் பொருட்டு 0114 825 825

கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 764
வர்ணம்:
திகதி: 12.11 2021
வெள்ளிக்கிழமை
A 10 34 55 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,183,435
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை (ஆண்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- பகல், இரவு கடமை
- யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு
076 097 3121



### வீடு விற்பனைக்கு

மட்டுவில் தெற்கில் 4 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை.) (8581)

077 056 6054


## நாட்டில் மேலும் 723 பேருக்கு தொற்று

(கொழும்பு) இலங்கையில் மேலும் 723 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 548,784 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர் (Kitchen Helper) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தங்குமிட வசதி உண்டு. (C-3004)

☎ -077 219 0128



## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர் (Kitchen Helper) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தங்குமிட வசதி உண்டு. (C-3004)

☎ -077 219 0128


# கண்ணீர் அஞ்சலி



எம் கல்லூரியின் பெயர்
சிறக்கப் பிறந்தவரே!
பொன்னின் எழுத்துக்களாய்
மிளிர்ந்தரே!
சமூக மலர்ச்சிக்காய் உழைத்தவரே!
ஒப்பாரும் மிக்காரும் இன்றி
திகழ்ந்தவரே!

விண்ணின் வீடு சென்றாலும் – எம்
கண்ணின் மணியென நிலைப்பீரே
சேவையின் சிகரமே
நிறை சாந்தி நீவிர் பெற
இறையை இறைஞ்சுகின்றோம்
கண்ணீர்ப் பூக்களாய்
நன்றியுடன் அஞ்சலிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

அமரர் **கந்தையா பாலசுப்பிரமணியம்**

(வாழ்நாள் பேராசிரியரும்
யாழ்.மருத்துவபீடத்தின் முன்னாள்
பீடாதிபதியும் யா/புனித ஹென்றியரசர்
கல்லூரியின் பழைய மாணவர் சங்க
முன்னாள் தலைவரும்)

பழைய மாணவர் சங்கம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை. (C-3001)


10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

STUDY IN SPAIN
(Schengen Country)

குறைந்தபட்ச தகமை: G.C.E A/L 3 PASS
No Need IELTS (But You must Speak English Very well) (C-2998)

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள்14/11/2021 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.

இதுவரையில் 202 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர் | வீசா கிடைக்கமுன்னர் முற்பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம் | நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
- நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-2789)

0768226240 DHL



## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18 - 30 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 5.30 மணி வரை. மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும். (8587)

074 049 0003


# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை இராசதுரை

மலர்வு
1946.07.08

உதிர்வு
2021.11.10



அல்வாய் வடக்கு ஆலங்கட்டையைப் பிறப்பிடமாகவும் இல.86 மலர்மகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை இராசதுரை கடந்த 10.11.2021 (புதன்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கணேசன் - சோதிமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக் கணவரும் ஜெயக்குமார் (உக்ரைன்), ஜெயக்குமாரி, ஜெயப்பிரியா(லண்டன்), துஷ்யந்தன்(லண்டன்), கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகௌரி, ஜெயதீஸ்வரன், கௌதமன்(லண்டன்), பிரியநிதா(லண்டன்), திவ்யா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, யோகம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற குணரத்தினம், பிறேமாவதி, சபாரத்தினம், காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் விதுர்ஜன்(லண்டன்), அஷ்மிதா, அபிநயா(லண்டன்), அஸ்வின்(லண்டன்), அர்ஜின்(லண்டன்), பிரணீஸ்(லண்டன்), வருண்சரவணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 86, மலர்மகள் வீதி,
அரியாலை.

(8589)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.